( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

**CC. No. 79/2022**

Name : ஆனந்தகிருஷ்ணன் **PW –3(LW -4)**
Father/Husband Name : கோபாலகிருஷ்ணன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 05.12.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024.

**<u>முதல் விசாராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.</u>**

1. நான் தற்போது குன்றத்தூரில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் Data Scientist ஆக பணிபுரிந்து வருகிறேன். 29.05.2019 அன்று என்னுடைய அண்ணன் பிரசன்ன கிருஷ்ணன் அழைத்தன் பேரில் அவருடன் நான் கேளம்பாக்கம் காவல்நிலையத்திற்கு சென்றேன். கோவளம் பீச் அருகே போலிசார் என்னை வர சொன்னார்கள். அங்கு உள்ள மீன் வள துறை அலுவலகம் அருகே கேளம்பாக்கம் போலிசார் வரைபடம் வரைந்தார்கள் அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை – எதிரிகள் 2, 3 ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிருந்து ஆஜர் படுத்தப்பட்டார். 3ம் எதிரி வழக்கறிஞர் மட்டும் ஆஜர்.</u>**

**<u>3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1. அ.சா.1 என்னுடைய சகோதரர். போலிசார் வர சொன்னதால் தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியும். வரைபடம் வரைந்ததில் தான் நான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன இருந்தது என்றால் North, South என்று மட்டும் இருந்தது. நான் கையொப்பம் செய்ததில்

சம்பவ இடம் மற்றும் அதன் வழி (Direction) என்பது மட்டும் தான் இருந்தது வேறு எதுவும் இல்லை. காணாமல் போனதாக சொல்லும் வாகனம் எனது அண்ணனுடையது என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S/d- N.Anupriya, 05.12.2024.
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.